SRI K. B. S. MANI : ஸர், இந்த ஷெட்யூலில் எம்.பி.பி.எஸ்.-க்கு 41-ம் ப்ரீ-மெடிக்கல் கோர்ஸ்-க்கு 22-ம் ஸ்தானங்கள் கொடுக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. இதில் இவ்வளவுதான் அப்ளிக்கேஷன் வந்ததா ? அல்லது இதற்கும் அதிகமாக அப்ளிகேஷன் வந்ததா ? அதில் எவ்வளவு அப்ளிகேஷன் தள்ளப்பட்டன ? அவ்விதம் தள்ளப்பட்டிருந்தால் அவர்களை இனிமேல் எடுத்துக் கொள்வதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : என் எனக்குத் தெரிந்தவரையில் ஷெட்யூல் காஸ்ட் வகுப்பினரிடமிருந்து வந்த அப்ளிகேஷன் எல்லாம் அனேகமாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. சில மிகுதியான இடங்களை மற்றவர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கலாம். எல்லோரையும் எடுத்துக்கொள்வதற்குத்தான் சர்க்கார் முயற்சி செய்து வருகிறது.

SRI S. NAGARAJA MONIGAR : இப்போது பின்தங்கிய வகுப்பினர்களுக்கும் ஏழைகளுக்கும் சர்க்கார் அதிகமான சலுகைகளை கொடுத்து டாக்டர் படிப்பு படிக்க வைத்தும், அவர்கள் பட்டம் பெற்ற பிறகு அரசாங்கத்திற்கு சேவை செய்ய வேண்டும் என்கின்ற எண்ணமில்லாமல் வேறு இடங்களுக்கு போய்விடுகிற நிலைமை ஏற்பட்டு விடுவதால் டாக்டர்கள் இல்லாமல் பல ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஆகவே இவர்கள் நமது சர்க்காரிலே வேலை செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் அவர்கள் இன்று காலையிலுள்ள பத்திரிகையைப் பார்ப்பார்களானால் நமது பிரதம மந்திரி அவர்கள் "வைத்திய சிகிச்சைக்கு பயிற்சி பெற்றவர்கள் கிராமாந்திரங்களில் வேலை செய்யவேண்டும் என்கின்ற நிர்ப்பந்தம் ஏற்படுத்துவது நல்லது" என்று சொல்லியிருப்பதைப் பார்க்கலாம். இதை நமது அரசாங்கமும் ஆராயும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

Indian Labour Conference, Nainital

* 353 Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether this Government was represented at the 16th Indian Labour Conference held at Nainital, in May 1958; and

(b) if so, the decisions arrived at in that conference?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Yes, Sir.

(b) A statement [a] containing the decisions arrived at the conference is placed on the table of the House.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இந்த மகாநாட்டு தீர்மானங்களை பரிசீலித்து நமது மாகாணத்திற்கு எவை எவை கவனிக்கப்படும் என்பதை தெரிவிக்கும்படிவேண்டுகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் இந்த நடவடிக்கைகளை நன்றாக படித்துப்பார்த்திருப்பார்கள் என்று நம்புகிறேன். இது பொதுவாக முதலாளிகளும் தொழிலாளிகளும் எந்த முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதற்கு செய்யப்பட்ட சிபாரிசுகள். இவைகள் எல்லாம் தீர்மானம் என்று சொல்லுவதற்கில்லை. இதன் அடிப்படையில் சர்க்கார் தங்களுடைய தொழிலாளர் கொள்கையை வகுத்துக்கொண்டிருக்கின்றது.

[a] Printed as Appendix III on pages 411-420 infra.